# பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2014



**கௌரவ அமைச்சரின் ஆசிச் செய்தி**

2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கைக்கு, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் ஆசிச் செய்தி வழங்கக் கிடைத்தமை பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

பாராளுமன்ற அலுவல்கள் விடயத்திற்குரிய பணிகள் மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய வகையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊழியர் குழாத்துடன் தொடர்புடைய தாபனச் செயற்பாடுகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நலனோம்பல் செயற்பாடுகளுக்கான அடிப்படைக் கொள்கைகளை வகுப்பதற்கும் அவற்றை கட்சி பேதமின்றி நடைமுறைப்படுத்துவதற்குமான கடப்பாட்டை இவ் அமைச்சு கொண்டுள்ளது.

அதிமேதகு சனாதிபதி அவர்களால் முன்வைக்கப்பட்ட நல்லாட்சியை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதும் எம்மீது சுமத்தப்பட்டுள்ள ஒரு முக்கிய பொறுப்பாகவும். அதற்காக மக்களுக்குச் சேவை வழங்குவதற்காகத் தங்களை அர்ப்பணித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அவர்களது ஊழியர் குழாதத்தினதும் அறிவு, மனப்பாங்கு, திறமைகள் என்பவற்றை விருத்தி செய்வதற்கு இவ் அமைச்சு எப்போதும் தயாராக உள்ளது.

பாராளுமன்ற முறை, அது தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை, பாராளுமன்ற கட்டளைச் சட்டங்கள் என்பன தொடர்பில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் பாரளுமன்ற உறுதிப்பினர்களின் ஊழியர் குழாத்திற்கும் அறிவூட்டப்பட்டு வருகின்ற அதேவேளை எதிர்வரும் வருடங்களிலும் பாராளுமன்ற சனநாயகத்தையும் நல்லாட்சியையும் பலப்படுத்துவதற்காக சமுதாய மட்டத்தில் பொது மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஊழியர் குழாத்திற்கும் எனது தனிப்பட்ட ஊழியர் குழாத்திற்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மஹிந்த யாபா அபேவர்தன

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்.

**செயலாளரின் ஆசிச் செய்தி**



பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் முழு ஊழியர் குழாத்தினதும் சேவைகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய 2014 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைக்கு ஆசிச் செய்தி வழங்கக் கிடைத்தமை எனக்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

இவ் அமைச்சின் அடிப்படைப் பணியாகக் கருதப்படும், பாராளுமன்ற உறுப்பினர்களின் பௌதிக மற்றும் சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதல் அவர்களின் ஊழியர்களுக்கான குறிப்பான சேவை இலக்குகளைப் பூர்த்தி செய்தல் தொடர்பான தகவல்கள் இவ் அறிக்கையில் அடங்கியுள்ளன.

மேலும் காலத்துக் காலம் அடையாளம் காணப்படும் சேவைத் தேவைகளை, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் புதிய அனுகுமுறைகளின் ஊடாக சேவைபெறுநர்களுக்கு திருப்தியளிக்கும் விதத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊழியர்கள் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்ற சேவையை வழங்கும் நோக்கில் அவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்காக நடாத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளுக்கு சிறந்த வரவேற்பு கிடைத்துள்ளது. சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் அறிவை இற்றைப்படுத்தி அவர்களது அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பம் தொடர்பிலும் இதே போன்ற வரவேற்பு கிடைத்தது.

நாளுக்கு நாள் விருத்தியடைந்து வரும் மனித வளத்தின் பயன்படுத்தப்படாத அறிவுக்கு தைரியமூட்டுவதன் ஊடாக எமது செயலாற்றுகையினை மிகச் சிறந்த நிலைக்குக் கொண்டு செல்வதே எமது ஒரே குறிக்கோளாகும். எதிர்வரும் வருடங்களிலும் மிகச் சிறந்த சேவையினை வழங்குவதற்குத் தேவையான சக்தியும் தைரியமும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன.

கடந்த வருடத்தில் அடைந்த முன்னேற்றத்திற்குத் தோள் கொடுத்த இவ் அமைச்சின் முழு ஊழியர் குழாத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் முன்னாள் அமைச்சர் வழங்கியிருந்த ஒத்துழைப்புக்காகவும் வழிகாட்டலுக்காகவும் அவருக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

பத்மசிரி ஜயமான்ன

செயலாளர்.

## பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

### அலுவலக அமைவிடம்

பத்தரமுல்லை, பெலவத்த, பன்னிபிட்டிய வீதி, 464 பீ இலக்க இடத்தில் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு அமைக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி இலக்கம் - 0112786988 / 0112177057
தொலைநகல் இலக்கம் - 0112786968
மின்னஞ்சல் முகவரி - mdpa@sltnet.lk
இணையத்தளம் - www.minparliament.gov.lk

### தொலைநோக்கு

வினைத்திறன் மிக்க மற்றும் ஆக்கவளமுடைய பொதுசனசேவையை முன்னிட்டு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை வலுவூட்டுதல்.

### செயற்பணி

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கின்ற பொதுசன சேவையினை உயர்நிலையில் தயார்படுத்துவதற்கு உறுதுணையான சேவைகளை வழங்குதல்.

### செயற்பாடுகள்

- தேவையான மனித வளங்களை வழங்குதல்.
    - கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பதவியினரை நியமித்தல்.
    - தேவைக்கேற்ப பதவியினரை சீர்படுத்தல்.
- திறன்மிக்க பதவியினரை வழங்குதல்.
    - கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பதவியினரை ஏணைய சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கும் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி திட்டங்களை செயல்படுத்தல்.
- நிதி வளங்களை வழங்குதல்.
    - கௌரவ பாராளுமன்ற பதவியினருக்கு சம்பளம் செலுத்துதல்.
    - சேவையை முடிவுறுத்திய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பதவியினருக்கு பணிக்கொடை பணம் செலுத்துதல்.
- பௌதிக வளங்கள் மற்றும் சேவை வசதிகளை வழங்குதல்.
    - அலுவலக உபகரணங்கள் மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்கள் வழங்குதல்.
    - தீர்வை வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
    - கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக கூட்டுக் காப்புறுதி முறையை நடைமுறைப்படுத்தல்.
- கொள்கை ஆக்கம்.
    - தேவையான அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்து கொள்கை ரீதியான முடிவுகளை பெற்றுக் கொள்ளல்
    - கொள்கை ரீதியான முடிவுகளை நடைமுறைப்படுத்தல்.

## அறிமுகம்

“PARLIAMENT” என்னும் “PARLE” எனும் பிரஞ்சு சொல்லிலிருந்து தோன்றியது. கலந்துரையாடுதல் என்பதே அதன் பொருளாகும்.

ஒரு நாட்டில் மக்கள் ஆட்சி செய்வதற்காகவும், அவர்களின் தேவைகளை ஒழுங்கு செய்வதற்காகவும் ஒரு முறையான சட்ட முறைமை தயாராக இருத்தல் வேண்டும். இப்பணியை நிறைவேற்றும் பொருட்டு மக்களின் நேரடிப் பங்களிப்பு நடைமுறைச்சாத்தியம் இன்மையினால் தமது பிரநிதிகள் உள்ளடங்கிய குழு ஒன்றினூடாக இதனை நிறைவேற்றுதல் சனநாயக நாடொன்றில் காணப்படுகின்ற மரபாகும்.

பரந்த ரீதியில் எடுத்துக்கொண்டால் ஒரு நாட்டின் சட்ட முறைமையை தயாரிப்பதற்கும் பொது மக்கள் தேவைப்பாட்டிற்கமைய அவற்றில் திருத்தங்களை செய்வதற்கும் பொதுமக்களினால் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் குழுவொன்று என பொருள் கூறப்படுகினறது. பல்வேறு பெயர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டாலும் சட்டமியற்றும் சபை தொடர்பாக ஜனநாயக நாடுகளில் காணக்கூடியது இவ்வடிப்படை கருத்தாகும்.

பண்டைய காலத்தில் பெரும்பாலான நாடுகளின் பல்வேறு காலப்பகுதிகளில் கலந்துரையாடி உடன்பாடுகள் மூலம் ஒருமித்த தீர்மானங்களுக்கு வரும் முறைமையைக் கானக்கூடியதாய் இருந்த்து. . இலங்கையிலும் இவ்வாறு ஆட்சி முறையொன்று இருந்ததற்கான சான்றுகள் தெளிவாக காணப்படுகின்றன. உதாரணமாக பொலன்னறுவை யுகத்தில் நிர்மாணிக்கப்பட்ட “ நிஸ்ஸங்க லதா மண்டபம்” அரசர் மற்றும் அமைச்சரவையின் கலர்துரையாடல்கள் உடன்பாடுகளிற்காக நிர்மாணிக்கப்பட்டதாகும். அதிலே மிக சிரேஷ்ட அமைச்சர்களுக்காக அரசருக்கு அருகில் முன் ஆசனத்தில் தயாரித்து உள்ளதாகவும் ஏனைய அமைச்சர்களுக்கு பின்னருக்கு ஆசனங்கள் தயாரித்து உள்ளதாகவும் கூறப்படுகின்றது. அதற்காக கட்டிடம் திட்டம் தெளிவாக காணப்பட்டது. “மங்குல் மடுவ“ இன்னும் தெளிவான உதாரணமாகும். உலக வரலாற்றில் பாராளுமன்ற அரசு முறையை பார்வையில் பிரித்தானிய பாராளுமன்றத்தின் “ அம்மா “ ஒரு நீண்ட வரலாறு கருத்தப்படுகிறது மற்றும் அது இலங்கை பாராளுமன்ற முறைமையில் பரப்புதல் தாகத்தைக் கொண்டிருக்கிறது போது என்று தெளிவாக உள்ளது.

தற்காலத்தில் பாராளுமன்றம் சட்டங்களை விதிப்பது போன்று நிதி முகாமைத்துவப் பொறுப்பக்களையும் வகிக்கும் அதி உயர் நிறுவனமாக கருதப்படுகின்றது. இலங்கையில் பாராளுமன்றம் அதி உன்னத மற்றும் இறைமை கொண்ட சட்டவாக்க சபையாகும்.

1931 ஆம் ஆண்டின் டொனமூர் அரசியலமைப்பின் ஊடாக சர்வஜன வாக்களிக்கும் அதிகாரம் மற்றும் நிறைவேற்றுக் குழு நிலை முறையினை அறிமுகப்படுத்தல் அரசியலமைப்பு விருத்தி வரலாற்றின் மைல்கல்லாகும். 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதுடன் “வெஸ்மினிஸ்டர்” முறையிலான அரசியலமைப்புச் சட்டமொன்று ஏற்படுத்தப்பட்டது. பாராளுமன்ற ஆட்சி முறையை தெளிவாகக் காணக்கூடியதாக இருப்பது இதிலிருந்தாகும். 1972 ஆம் ஆண்டு குடியரசொன்றாக ஆக்கப்பட்டதன் பின் இலங்கை டொமினியன் அந்தஸ்த்திலிருந்து விடுதலையடைந்ததோடு, செனட் சபை, ஆளுனர் பதவி என்பவை அகற்றப்பட்டு அதற்கு பதிலாக பெயரளவிலான ஜனாதிபதி பதவி அறிமுகப்படுத்தப்பட்டது. 1978 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட புதிய அரசியல

மைப்புச் சட்டத்தூடாக ஜனாதிபதிப் பதவி நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவியொன்றாக்கப்பட்டது.

“வினைத்திறன் மிக்க ஆக்கவளமுடைய பொதுசனசேவையொன்றின் நிமித்தம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை வலுவூட்டுவது” நோக்கத்தில் 1970 ஆம் ஆரம்பிக்கப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு அமைதியாக பொதுசன சேவையாற்றும் அமைச்சாகும்.

கௌர கே. பீ. ரத்னாயக்க அவர்கள், விளையாட்டு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்காக, இவ்வமைச்சின் முதல் அமைச்சராக (1970-1977) பணியாற்றினார்கள். பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு வரலாற்றுப் மிக நீண்ட காலம் அமைச்சர் பதவி வகித்த கௌரவ வின்ஸ்டன் பெரேரா அமைச்சர் 1977 முதல் 1990 வரை விளையாட்டு நிதி/ சூழல் போன்ற பிரிவுகளுடன் ஒன்றிணைந்து இவ் அமைச்சு மிக சக்தி வாய்ந்த நிறுவனமாக மாறியது. கௌரவ கலாநிதி விமல் விக்ரமசிங்ஹ அவர்கள் (1994 - 1997) பொது நிர்வாக / பெருந்தோட்டத் துறை அமைச்சுடனும், கௌரவ ஜெயராஜ் பர்னாந்து புல்லே அவர்களால் (1997 - 2000) திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சுடனும் கௌரவ எஸ். பீ. திஸாநாயக்க அவர்களால் சமூர்த்தி, கிராமிய அலுவல்கள் மற்றும் மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சுடனும், கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்களால் (2001) மகாவலி அபிவிருத்தி அமைச்சுடனும் ஒன்றிணைந்து பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சினை வழிநடத்தியது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக மிகச் சிறந்த சேவைகளை வழங்கியதன் மூலமாகும்.

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு வரலாற்றில் சிறப்பான திருப்பு முனையாக அமைவது 2001.12.12 ஆம் திகதி கௌரவ ஏ. எச். எம். அஸ்வர் அவர்களின் கீழ் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு தனியான ஓர் அமைச்சாக்கப்பட்டதாகும். பின்பு கௌரவ மில்றோய் பர்னாந்து அவர்களின் கீழும் (2004 - 2005) கௌரவ பேராசிரியர் விஸ்வா வர்ணபால அவர்களின் கீழும் (2006 - 2007) , அல்ஹாஜ் எம். எச்.மொஹமட் அவர்களின் கீழும் (2008 - 2010) நிர்வகிக்கப்பட்ட இவ்வமைச்சு 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஜனவரி 08 ஆம் திகதி வரை கௌரவ சுமேதா ஜீ. ஜயசேன அவர்களின் கீழும் செயற்பட்ட இவ்வமைச்சு கௌரவ பாராளுமன்ற

அங்கத்தவர்களின் நலன்கருதி மிகப் பரந்த அடிப்படையில் வினைதிறன் மிக்கதாக மற்றும் ஆக்க வளமுடையதாக பல சேவைகளை வழங்கியுள்ளது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் பதவியணியினரை நியமித்தல் மற்றும் அவர்களுக்கு சம்பளம் மற்றும் பணிக்கொடை வழங்குவதால் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிபத்திரங்களை வழங்குவதன் மூலமும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை காப்புறுதி செய்து அவர்களுக்காக வைத்திய மற்றும் அவசர விபத்துப் பணிக்கொடை பயன் என்பவற்றை வழங்கி விசேடமாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்கு பயிற்சிகளை வழங்குதல் போன்ற சேவைகளை வழங்குவதன் மூலமும், கௌரவ உறுப்பினர்களுக்கு உச்ச சேவையொன்றினை வழங்கும் சந்தர்பம் கிடைத்துள்ளது 2014 ஆம் வருடத்துடன் தொடர்பான எமது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் இச்செயலாற்றுகை அறிக்கை மூலம் முன்வைக்கப்படுகிறது.

## பாராளுமன்ற உறுப்பினர் பணிக் குழு பிரிவு
## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வசதிகள்

**01. பணிக்குழு**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்காளர்களுக்கு நிறைவேற்றும் பணிகளுக்கு உதவி புரிவதன் பொருட்டு ஆராய்ச்சி உதவியாளர், பாராளுமன்ற உறுப்பினர் செயலாளர், தட்டெழுத்தாளர், அலுவலக உதவியாளர் மற்றும் சாரதி எனும் பதவிகளின் கீழ் தனியார் பணிக்குழுவின் சேவையை பெறுவதற்கான உரிமையைப் பெறுவர். தற்பொழுது அப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் படி, அரச சேவை அல்லது கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டுள்ளோரை இணைத்துக் கொண்டு அல்லது அதற்கு புறம்பாக நியமிக்கப்படும் இப் பணிக்குழுவினர், உரிய பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருக்கும் வரை அல்லது அவர் விரும்பும் வரை சேவையாற்றுவர்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பதிலாக எண்ணிக்கை அடிப்படையிலான தகவல்களை திரட்டுதல் மற்றும் ஆராய்ச்சி சார் விடயங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கையிடும் விசேட பணியானது இப் பணிக்குழுவின் “ஆராய்ச்சி உதவியாளர்” பதவி வகிப்பவருக்கு கையளிக்கப்படும். 2011.05.05ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அப் பதவிக்கு அரச சேவைக்கு புறம்பாக வேலை வாய்ப்பற்ற பட்டதாரி ஒருவரை நியமிப்பதற்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு 2013.01.01ஆம் திகதி முதல் பொ.நி.சு.06/2006 (iv)இன் MN.4-2006 சம்பள முறையின் ஆரம்ப சம்பளப் படிமுறையான ரூ.15,215/- நிரந்தர கொடுப்பனவும் அரசாங்கத்தின் அனுமதியளிக்கப்பட்ட வாழ்க்கை செலவு கொடுப்பனவும் வழங்கப்படும்.

ஆராய்ச்சி உதவியாளராக இணைத்துக் கொள்ளப்பட்டு அரச சேவையில், உள்ளூராட்சி சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபணங்களில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளுக்கு அவர்களது நிரந்தர பதவியின் சம்பளம் அந் நிறுவனத்தினால் வழங்கப்படுவதோடு, பின்னர் அது இவ் அமைச்சினால் மீள்நிரப்பு செய்யப்படும்.

**இந் நியமனத்திற்கு பின்வருமாறு மாதாந்தம் சம்பளமும் கொடுப்பனவும் வழங்கப்படும்**

| பதவி | சம்பளம் | கொடுப்பனவு |
|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் செயலாளர் | ரூ.13,845/- | ரூ.7800 வாழ்க்கை லவு கொடுப்பனவு 2014 நவம்பர் முதல் 3000/- உள்ளக கொடுப்பனவு |
| தட்டெழுத்தாளர் | | |
| அலுவலக உதவியாளர் | ரூ.13,555/- 20% கொடுப்பனவு | |
| சாரதி | ரூ.12,330/- ரூ.12,990/- | |
| ஆராய்ச்சி உதவியாளர் (அரச சேவைக்கு புறம்பாக) | ரூ.15,215/- | |
| ஆராய்ச்சி உதவியாளர் (அரச சேவையிலுள்ள) | நிரந்தர பதவிக்கான சம்பளம் | |

பாராளுமன்ற பணிக்குழுவுக்கு மாதாந்த கொடுப்பனவு இவ் அமைச்சினால் நிறைவேற்றப்படும் அடிப்படை நடவடிக்கையாவதோடு, நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் அவர்கள் நியமனத்தை பொறுப்பேற்றதாக அமைச்சுக்கு அறிவித்ததன் பின்னரே அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படும். அத்தோடு, கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் பரிந்துரையின் பேரில் பிரத்தியேக பணிக்குழு சேவையில் ஈடுபட்டுள்ளோரில் ஒருவருக்கு மாத்திரம் மாதமொன்றிற்கு 400/- பெறுமதியான பிரயாணக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

அரச சேவையிலிருந்து அல்லது அரச கூட்டுத்தாபனத்திலிருந்து யாரேனுமொருவர் இக் குழுவிற்கு நியமிக்கப்படும் போது அவரது நிரந்தர பதவியின் சம்பளம் அல்லது இப் பதவிக்குரிய சம்பளம் ஆகிய இரண்டில் ஆகக் கூடிய சம்பளத்தைப் பெறுவதற்கு உரிமையுண்டு. இருப்பினும் குறித்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வேறு கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது.

ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு அரச சேவையிலிருந்து விடுவிக்கப்படும் பட்டதாரி உத்தியோகத்தர்களின் செயற்திறன் மதிப்பீடு மூலம் அவர்களது சம்பள படியேற்ற கொடுப்பனவிற்கான பரிந்துரைகள் நிரந்தர சேவையிடத்திற்கு இவ் அமைச்சினால் வழங்கப்படும்.

இவ்வாறு தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்படும் பாராளுமன்ற உறுப்பினர் பணிக்குழுவிற்கு ஓய்வூதிய உரித்து கிடையாது. இருப்பினும் பதவி வகிப்பவரை அப் பதவிகளிலிருந்து விலக்குதல் அல்லது இராஜினாமா செய்தால் அவர் 06 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருப்பின் அவ்வாறு சேவையாற்றிய காலப்பகுதிக்கு அதுவரை வழங்கப்பட்ட சம்பளத்தில் 20% தொகைக்கு இணையான பணிக்கொடைக்கான உரிமையை பெறுவார். இவ் உரிமையானது ஆராய்ச்சி உதவியாளர் உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதன்று.

இதற்கு மேலதிகமாக 06 மாத கால சேவைக் காலத்தை பூர்த்தி செய்த பாராளுமன்ற உறுப்பினர் குழு உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட 5000/- பெறுமதியான உற்சவ முற்பணம் பெறுவதற்கான வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இத் தொகையானது வட்டியில்லா 10 தவணைகளில் மீள அறவிடப்படும்.

**பணிக்குழு நியமனமும் விலக்கலும்**

இவ் வருடத்தின் 2014.12.31ஆம் திகதி வரையான பணிக்குழு நியமனமும் சேவை முடிவுறுத்தல்களும் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| பதவி | நியமிக்கப்பட்டோர் எண்ணிக்கை | சேவை முடிவுறுத்தப்பட்டோர் எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ளோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் செயலாளர் | 47 | 47 | 220 |
| தட்டெழுத்தாளர் | 54 | 56 | 220 |
| அலுவலக உதவியாளர் | 37 | 37 | 220 |
| சாரதி | 58 | 58 | 213 |
| ஆராய்ச்சி உதவியாளர் (அரச உத்தியோகத்தர்) | 17 | 20 | 80 |
| ஆராய்ச்சி உதவியாளர் (அரச உத்தியோகத்தர் அல்லாதோர்) | 23 | 17 | 63 |

- 2014ஆம் ஆண்டு இறுதி வரை 137 பாராளுமன்ற உறுப்பினர் பணிக்குழு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**01. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக பணிக்குழுவை பயிற்றுவித்தல்**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளின் பேரில் நியமிக்கப்பட்ட பணிக்குழுவின் அதிகமானோர் அரச சேவை குறித்த அறிவும் அனுபவமும் அற்றோர் என்பதால் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பொதுசன சேவைகளை மிகுந்த வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு உதவி புரிதலை நோக்காகக் கொண்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இவ் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பின்வரும் பாடத்துறைகள் உள்ளடங்கும்**

- கணனி கோட்பாடுகள் மற்றும் கணனி பாவனை, இணையம் மற்றும் மின்னஞ்சலை பயன்படுத்தல்
- அலுவலக முகாமை மற்றும் பொதுமக்கள் தொடர்பு
- நெறிமுறைகளை பின்பற்றி நல்லாட்சியை ஏற்படுத்தல்
- பாராளுமன்ற உறுப்பினரின் பணி,அவருக்கான சிறப்புரிமைகள், மனு சபை தொடர்பாக விழிப்புணர்வூட்டல்
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட முகாமைத்துவம் ஊடாக அரச நிதியை முறையாக பயன்படுத்தல்
- மனித திறன்கள் மேம்பாடு ஊடாக தனிநபர் விளைதிறனை விருத்தி செய்தல்
- மனித உரிமைகளை பாதுகாத்தல்
- அமைச்சின் பணிகள் (நிர்வாகப் பிரிவு, விநியோகப் பிரிவு, கணக்குப் பிரிவு)
- ஊடக பாவனையின் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்

- தற்போது துரிதமாக உயர்வடைந்து செல்லும் வீதி விபத்துக்களை குறைத்து ஒழுக்கம் மிக்க சாரதியாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினருக்கு சேவையாற்றுதல் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் சாரதிகளுக்கும் செயலமர்வுகள் நடாத்தப்படும்.

02. சிறந்த நிதி நிர்வாகத்தை நிலைநாட்டுவதை நோக்கத்தை முன்னோடியாக கொண்டு மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு பாராளுமன்ற செயற்குழு மற்றும் கட்டளைகள் குறித்து விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகள் நடாத்தப்படும்.

இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இலங்கை பாராளுமன்றம், மாவட்ட செயலகம், சட்டமா அதிபர் திணைக்களம், மாகாண சபைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை பொலிஸ் போக்குவரத்து பிரிவு முதலான பல்வேறு அரச நிறுவனங்களில் பணியாற்றும், குறித்த விடயங்களில் தேர்ச்சி பெற்ற வளவாளர்களின் ஒத்துழைப்புக்களும் பெற்றுக் கொள்ளப்படும்.

**இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது**

- அமைச்சுடன் சிறந்த தொடர்பினை பேணுவதற்கு இலகுவாகும் வகையில் அமைச்சின் பணிகள் குறித்து அறிவூட்டல்
- விளைதிறன் மிக்கதாக கணனியை பயன்படுத்துவதன் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களுக்குரிய தரவுகளைத் திரட்டல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அத் தரவுகளைப் பயன்படுத்திக் கொள்ளல்
- நல்லாட்சி கோட்பாடுகள் பிரகாரம் அரச நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுடன் சிறந்த தொடர்புகளை கட்டியெழுப்பி பொது மக்களுக்கு உன்னதமான சேவையை எற்படுத்தல்
- பாராளுமன்ற கட்டளைச்சட்டங்கள், பல்வேறு செயற்குழு சந்தர்ப்பங்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் பணி குறித்து அறிவூட்டல் ஊடாக சிக்கலற்ற தீர்வுகளை எடுப்பதற்கு வழிகாட்டல்
- உற்பத்தி திறன் எண்ணக்கருவை பயன்படுத்தி முறையான அலுவலகத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொது மக்களுக்கு வினைத்திறனான மற்றும் விளைதிறன் மிக்க சேவையை வழங்குவதற்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு துணை புரிதல்
- மனித உரிமைகள், அரசியலமைப்பு, அலுவலக முகாமைத்துவம், ஐவகை எண்ணக்கரு மற்றும் உற்பத்தி திறன் முதலதன பல்வேறு விடயங்கள் குறித்து அறிவூட்டுவதன் மூலம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பணிகளுக்கு துணை புரிதல்
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் முறையான நிர்வாகத்திற்கு பாராளுமன்ற உறுப்பினருக்கு துணை புரிவதற்குரிய அறிவைப் பெறல்
- தொலைபேசி உரையாடல்களை மேற்கொள்ளல், அவற்றிற்கு பதிலளித்தல் தொடர்பாக பணிக்குழுவை விழிப்புணர்வூட்டுவதன் மூலம் சிறந்த மனித தொடர்பை கட்டியெழுப்பல்
- வீதி விதிகளை பின்பற்றி ஒழுக்கம் மிக்க சாரதியாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினருக்கு உதவுவதோடு விபத்துக்களை குறைக்க முயற்சித்தல்

2014ஆம் ஆண்டில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பணிக்குழு மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு 11 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

**2014.01.01 முதல் 2014.02.31 வரை நடாத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பணிக்குழு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**

| | திகதி | நிகழ்ச்சித் திட்டம் | பங்குபற்றியோர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 2014.03.25 | பாராளுமன்ற அலுவல்கள் குறித்த ஒரு நாள் செயலமர்வு | அமைச்சுக்களின் உத்தியோகத்தர்கள் | இலங்கை பாராளுமன்றம் |
| 2 | 2014.05.06 | பாராளுமன்ற உறுப்பினர் பணிக்குழுவின் சாரதிகளுக்கான பயிற்சி | மேல்மாகாணம், தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் சாரதிகளுக்கு | சீட்ரெக் நிறுவனம் |
| 3 | 2014.05.19,20 | பாராளுமன்ற உறுப்பினர் பணிக்குழுவிற்கான பயிற்சி | வட மத்திய மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களின் பணிக்குழுவிற்கு | தேசிய நன்னீர் மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின உற்பத்தி பயிற்சி நிறுவனம் -கலாவெவ |
| 4 | 2014.06.09 | பாராளுமன்றம் கிராமத்திற்கு( பாராளுமன்ற முறை குறித்து அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்) | பாடசாலை மாணவர்களுக்கு (மொனராகலை கல்வி வலயம்) | மொனராகலை றோயல் கல்லூரி கேட்போர் கூடம் |
| 5 | 2014.06.09 | மேற்குறித்தது | ஆசிரியர்களுக்கு (மொனராகலை கல்வி வலயம்) | மொனராகலை புத்தி மந்திரய கேட்போர்கூடம் |
| 6 | 2014.06.10 | மேற்குறித்தது | இளையவர்களுக்கு (மொனராகலை படல்கும்புர, சியம்பலாண்டுவ பி.செ. பிரிவு) | மொனராகலை சிலன்ரீச் ஹோட்டல் |
| 7 | 2014.06.11 | மேற்குறித்தது | பாடசாலை மாணவர்களுக்கு (வெல்லவாய கல்வி வலயம்) | வெல்லவாய மஹிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடம் |
| 8 | 2014.06.11 | மேற்குறித்தது | ஆசிரியர்களுக்கு (வெல்லவாய கல்வி வலயம்) | வெல்லவாய குமாரதாச வித்தியாலய கேட்போர் கூடம் |
| 9 | 2014.09-08,09 | நேர் சிந்தனைகளை விருத்தி செய்தல் மற்றும் குழு செயற்பாடுகளை விருத்தி செய்தல் | அமைச்சின் பணிக்குழுவினருக்கு | ஹைப்ரேண்ட் டீம் நிறுவனம் - மத்துகம பயிற்சி நிலையம் |
| 10 | 2014.10.09 | 2014 உலக சிறுவர் தினத்தின் பொருட்டு பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 2014 உலக சிறுவர் தினத்தின் பொருட்டு பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | பாடசாலை மாணவர்கள் | பாராளுமன்றம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 2014.11.27 | பாராளுமன்ற முறை குறித்து அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | வெல்லவாய பிரதேச செயலக பிரிவின் தொண்டர் அமைப்பின் செயற்பாடுகள், மகளிர் அமைப்பு செயற்பாடுகள் மற்றும் பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | வெல்லவாய மஹிந்த ராஜபக்ஷ விரிவுரைக் கூடம் |

**பாராளுமன்ற உறுப்பினர் சேவை வழங்கல் பிரிவு**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் பொதுமக்களின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படும் சேவைகளை மிக இலகுவாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் நலன்புரிக்கு இவ் அமைச்சின் பாராளுமன்ற உறுப்பினர் சேவை வழங்கல் பிரிவு ஊடாக 2014ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சேவைகளின் முன்னேற்றம் பின்வருமாறு

01. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் போக்குவரத்து வசதிகளுக்கு வாகனங்களை வழங்கல்

- 12ஆவது பாராளுமன்றத்தினதும் 13ஆவது பாராளுமன்றத்தினதும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ் அமைச்சினால் வழங்கப்பட்ட வாகனங்களுள் 2014ஆம் ஆண்டில் 03 வாகனங்களின் தேய்மானப் பெறுமதி செலுத்தப்பட்டதன் பின்னர் குறித்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயருக்கு கையளிக்கப்பட்டது.
- 2014ஆம் ஆண்டிற்கு ஏற்ப தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களால் தேய்மானத்தின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 05 வாகனங்களுக்கு மூன்றாம் நபரின் காப்புறுதி மற்றும் 05 வாகனங்களுக்கு இலவச வருமான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

- இவ் அமைச்சினால் 12 ஆவது பாராளுமன்றத்தினதும் 13 ஆவது பாராளுமன்றத்தினதும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களுக்கு உரிய தேய்மானப் பெறுமதியாக 153,500/- 2014 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டுள்ளது.

- தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் பொருட்டு அமைச்சரவை தீர்மானத்தின் படி இவ் அமைச்சினால் 2014 ஆம் ஆண்டில் 04 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

**கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டு காப்புறுதி முறை**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டு காப்புறுதி முறையின் கீழ், இரண்டு இலட்ச உச்ச பெறுமதியின் கீழ் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வைத்தியசாலைக்கான கட்டணம், மருத்துவ பரிசோதனை (ரூ 6000/-) மற்றும் மூக்கு கண்ணாடி )ரூ5000/-) என்பவற்றை பெறுவதற்கு காப்புறுதி நன்மை வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| 2014.01.01 முதல் 2014.12.31 வரை கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | - 122 |
| செலுத்தப்பட்ட மொத்த தொகை | - ரூ.15,676,834/- |

**கௌரவ பாராளுமன்ற அங்கத்தவர்களின் அவசர விபத்துக்காப்புறுதி.**

இதன் கீழ் அவசர விபத்தின்போது அல்லது பயங்கரவாத தாக்குதலின் போது மரணிக்கின்ற கௌரவ பாராளுமன்ற அங்கத்தவர்களுக்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ரூபா ஐந்து மில்லியன் தொகை வழங்கப்படுவதோடு இவ்வருடம் சம்பந்தமாக அவ்வாறான நிலைமை யொன்'று ஏற்படவில்லை.

03. கௌரவ பாராளுமன்ற அங்கத்தவர்களின் உபயோகத்திற்காக மூன்று வருடத்திற்கொருமுறை அலுவலக உபகரணங்கள் வழங்குதல்

இவ் அமைச்சினால் மூன்று வருடத்திற்கொருமுறை பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவரிற்காக கணனி இயந்திரமொன்று, நிலற் பிரதி இயந்திரமொன்று, தொலைநகல் இயந்திரமொன்று மற்றும் கையடக்க தொலைபேசி ஒன்றினையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 350,000/= ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படுவதோடு, இதற்காக கௌரவ பாராளுமன்ற அங்கத்தவரொருரிடமிருந்து அறவிடப்படுவது அன்னளவாக மொத்த தொகையில் 17% ஆகும். அதன்படி 2014 ஆம் ஆண்டினுள் கௌரவ பாராளுமன்ற அங்கத்தவர்கள் 54 பேர்களுக்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 15,911,062.85 தொகை செலவிடப்பட்டுள்ளதோடு அதன் மூலம் கீழே காட்டப்பட்டுள்ள உபகரணங்கள் பாராளுமன்ற அங்கத்தவர் சேவைகள் வழங்குதல் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

| உபகரண வகைகள் | வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|
| கணனி இயந்திரம் | 47 |
| நிழற் பிரதி இயந்திரம் | 46 |
| தொலைநகல் இயந்திரம் | 42 |
| கையடக்கத் தொலைபேசி | 42 |

04. முன்னேற்ற மீளாய்வு செயற்பாடுகள்

- வருடாந்த முன்னேற்ற அறிக்கையை தயாரித்து பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்
- அமைச்சின் நிருவாக அறிக்கையை தயாரித்தல்
- வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்

## நிதிப் பிரிவு

அமைச்சிற்கு பொதுத் திறைசேரி மூலம் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளை வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்ட விடயங்களுக்காக முறையான மற்றும் சிறப்பான முகாமையின் மூலம் செலவிடுவதினூடாக நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஒருங்கிணைத்தல், ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் ஏனைய கணக்கு அறிக்கைகளை பேணுதல் இப்பிரிவிற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்புக்களாகும்.

- பாராளுமன்ற அங்கத்தவர் பதவியினருக்கு சம்பளம் செலுத்துதல், சேவையை முடிவுறுத்திய பாராளுமன்ற அங்கத்தவர் பதவியினருக்கு பணிக்கொடை செலுத்துதல், பாராளுமன்ற அங்கத்தவர் பதவியினர் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக செலவுகளை மேற்கொள்ளல்.
- பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு உபகரணங்களை வழங்குவதற்காக காசோலைகளை வழங்குதல்.
- அமைச்சின் அனைத்து செலவு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து நிதிக் கட்டுப்பாடுகளைப் பேணுதல்.
- செலவுகளை கணக்கு வைத்தல் மற்றும் மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகளை திறைசேரிக்கு முன்வைத்தல்.
- அரச அலுவலர்களின் முற்பண “ பீ “ கணக்கை பேணுதல்.
- வருடாந்த மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்து கொள்ளல்.
- உத்தியோகபூர்வ வங்கி கணக்கை பேணுதல் மற்றும் வங்கி கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்தல்.
- கணக்காய்வு விசாரணைகளுக்காக பதில்களை வழங்குதலும் இப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற விடயங்களாகக் கருதலாம்.

| கணக்குப் பிரிவு<br>2014/12/31 ஆம் திகதிற்கு மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்கள் சம்பந்தமான அறிக்கை | | | |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **நிகழ்ச்சித் திட்டம் 01 ரூபா** | **நிகழ்ச்சித் திட்டம் 02 ரூபா** | **மொத்த செலவினம் ரூபா** |
| சம்பளங்களும் வேதனங்களும், | 4,668,993.00 | 12,595,021.00 | 17,264,014.00 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளம் | 1,264,188.00 | 775,200.00 | 2,039,388.00 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 2,914,451.00 | 326,560.360.00 | 329,474,811.00 |
| பிரயாணச் செலவினம் - உள்நாடு | 799,894.00 | 139,621.00 | 939,515.00 |
| பிரயாணச் செலவினம் - வெளிநாடு | 1,234,343.00 | 2,500.00 | 1,236,843.00 |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 482,115.00 | 582,974.00 | 1,065,089.00 |
| எரிபொருள் | 4,982,448.00 | 2,183,550.00 | 7,165,998.00 |
| அன்ன பானம் மற்றும் சீருடை | 8,000.00 | 65,952.00 | 73,952.00 |
| ஏனைய வழங்கள்கள் | - | 47,468.00 | 47,468.00 |
| வாகன பராமரிப்பு செலவினம் | 2,899,912.00 | 1,365,981.00 | 4,265,893.00 |
| இயந்திரங்களும் பொருத்துக்களும்-பராமரிப்பு | 36,199.00 | 324,700.00 | 360,899.00 |
| கட்ட்டங்களும் நிர்மானங்களும் பராமரிப்பு செலவினம் | 52,675.00 | - | 52,657.00 |
| போக்குவரத்து சேவைகள் | - | - | - |
| தபால் மற்றும் தொலைத்தொடர்பு | 672,607.00 | 909,876.00 | 1,582,486.00 |
| மின்சாரம் மற்றும் நீர் | 268,713.00 | 2,256,509.00 | 2,525,222.00 |
| குத்தகை மற்றும் உள்ளூராட்சி நிறுவன வரிகள் | 200,000.00 | 7,373,994.00 | 7,573,994.00 |
| ஏனைய சேவைகள் | 622,029.00 | 16,575,933.00 | 17,197,962.00 |
| ஓய்வூதிய பயன்கள் | - | 12,948,179.00 | 12,948,179.00 |
| அரச அலுவலர்களுக்கான சொத்துக்கடன் வட்டி | - | 426,648.00 | 426,648.00 |
| மொத்தம் | 21,106,567.00 | 385,134,469.00 | 406,241,036.00 |
| **மூலதன செலவு** | | | |
| **மூலதன சொத்துக்களை மருசீரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்** | | | |
| கட்டடங்களும் நிர்மாணங்களும் | | | |
| இயந்திரங்களும் பொறுத்துக்கள் பராமரிப்பு | 13,500.00 | 4,200.00 | 17,700.00 |
| வாகனங்கள் | 436,549.00 | 180,520.00 | 617,069.00 |
| **மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல்.** | | | |
| வாகனங்கள் | - | - | - |
| வீட்டுத்தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 154,411.00 | 897,996.00 | 1,052,407.00 |
| இயந்திரங்களும் பொறுத்துக்களும் | - | - | - |

| | | | |
|---|---|---|---|
| **மூலதன மாற்றுதல்கள்** | | | |
| அபிவிருத்தி உதவிகள் | - | 15,911,063.00 | 15,911,063.00 |
| **மனிதவள அபிவிருத்தி** | | | |
| பயிற்சியளித்தல் மற்றும் திறமைகளை மேம்படுத்தல் | - | 4,584,564.00 | 4,584,564.00 |
| மொத்தம் | 604,460.00 | 21,578,343.00 | 22,182,803.00 |

**பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

**2014 நிதி முன்னேற்றம்**

| | தேறிய ஏற்பாடு(ரூ) | செலவினம் (ரூ) | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| (1) மீண்டெழும் செலவினம் | | | |
| சம்பளங்களும் வேதனங்களும் | 347,630,015.00 | 346,738,825.00 | 99.70% |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | 59,639,985.00 | 59,502,210.00 | 99.70% |
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | **407,270,000.00** | **406,241,035.00** | **99.70%** |
| 2) மூலதன செலவினம் | | | |
| (I) மூலதன சொத்துக்களை மருசீரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் | **2,200,000.00** | **634,769.00** | **28.80%** |
| கட்டடங்களும் நிர்மாணங்களும் | - | - | |
| இயந்திரங்களும் பொறுத்துக்களும் | 500,000.00 | 17,700.00 | |
| வாகனங்கள் | 1,700,000.00 | 617,069.00 | |
| **(II)மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல்.** | **1,400,000.00** | **1,052,407.00** | **75.10%** |
| வாகனங்கள் | - | - | |
| வீட்டுத்தளபாடங்களும் அ.உப | 1,200,000.00 | 1,052407.00 | |
| இயந்திரங்களும் பொறுத்துக்களும் | 200,000.00 | - | |
| **(III) மூலதன மாற்றம் அபிவிருத்தி உதவிகள்** | **35,500,000.00** | **15,911,063.00** | **44.80%** |
| பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக உபகரணங்களை வழங்குதல் | 35,500,000.00 | 15,911,063,.00 | |
| **(IV)மனிதவள அபிவிருத்தி** | **5,500,000.00** | **4,584,564.00** | **83.30%** |
| பயிற்சியளித்தலும் திறமைகளை மேம்படுத்தலும் | 5,500,000.00 | 4,584,564.00 | |
| **மொத்த மூலதன செலவினம்** | **44,600,000.00** | **22,182,803.00** | **49.70%** |

**பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

**அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு - 2014**

| | செலவின் உச்ச எல்லை (ரூ) | பெறுகைகளின் குறைந்த எல்லை (ரூ) | பற்று மீதியின் உச்ச எல்லை (ரூ) |
|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட எல்லைகள் | 4 000 000.00 | 2300 000.00 | 20 000 000.00 |
| வருட முடிவில் உண்மைப் பெறுமதி | 3555103.00 | 3 780 410.17 | 8099488.78 |

## நிர்வாகப் பிரிவு

அமைச்சின் விடயப் பரப்பிற்குரிய அனைத்து நிர்வாக மற்றும் தாபன அலுவல்களை நன்கு ஒழுங்கு செய்து செயல்முறைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் நிர்வாகப் பிரிவுக்கு ஒப்படைக்கப்படும்.

- பாராளுமன்றத்தின் ஆலோசகர் நிர்வாகச்சபை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.
- சனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் ஏனைய அமைச்சு திணைக்களங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு.
- அமைச்சு பணிக்குழுவின் பொது நிர்வாகத்தையும் ஒழுங்குவிதிகளையும் பேணுதல்.
- அமைச்சு உத்தியோகத்தர்களின் தாபன நடவடிக்கைகளை செய்தல்.
- உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளை பேணுதல் மற்றும் இற்றைப்படுத்தல்.
- கௌரவ அமைச்சர் அவர்களின் தனிப்பட்ட பணிக்குழுவுக்குரிய தாபன நடவடிக்கைகள்.
- அமைச்சு பணிக்குழுவுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல்.
- அமைச்சு பணிக்குழுவின் தேவையின்படி கடன்தொகையை அனுமதித்தல்.
- அமைச்சின் அனைத்துப் பிரிவுகளில் பணிபுரியும் பணிக்குழுவிற்கு சிறப்பான மனநிலையுடன் தனது பணி உயர் மட்டத்தில் வழங்கமுடியுமாறு பௌதீக சூழலை அமைத்தல்.
- நாளாந்த அஞ்சல்களை ஒழுங்காக வினியோகித்தலும் வெளியே அனுப்பும் கடிதங்களை ஒழுங்காக அனுப்புதல் மூலம் நிர்வாகத்தை செயற்திறனாக்கல்.
- அமைச்சின் பணிக்குழுவை பயிற்சி செய்தல்.
- அமைச்சின் அனைத்து பெறுகை நடவடிக்கைகள்.

## கணனிப் பிரிவு

- அமைச்சின் கணனி முறைமையை இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லுதலும் அதற்குரிய மின்னூடக இலத்திரனியல் உபகரணங்களை செயற்படுத்தலும் நடாத்துதலும்.
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவல்கள் அடங்கிய தரவுகள் தொகுப்பு ஒன்று இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லுதலும் அமைச்சின் தேவையின்படி பல்வேறு தகவல்கள் அடங்கிய அறிக்கைகளை தயாரித்தல்.
- இணையத்தளமும் மின்அஞ்சலும் செயற்திறனாக நடாத்திச் செல்லுதல்.
- இலங்கை அரசாங்க வலையமைப்புக் கருத்திட்டத்தின் மூலம் வழங்கியுள்ள கணனி வலையமைப்பை நடாத்திச் செல்லுதல்.
- அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய தகவல்கள் அடங்கிய தரவுகள் வங்கி நடாத்திச் செல்லுதல் மற்றும் கணனி நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல்.
- அலுவலக உத்தியோகத்தர்களின் கணனி அலுவல்களுக்காக உதவுதல்.
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட பணிக்குழுவுக்காக கணனிப் பயிற்சியை வழங்குதல்.
- அமைச்சின் ஊடக அலுவல்களை உள்ளடக்குதல்.

**பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் அனுமதிக்கப்பட்ட பணிக்குழு**

| பதவி | **அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை** | தற்போதுள்ள **எண்ணிக்கை** | வெற்றிடங்களின் **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 | - |
| மேலதிக செயலாளர் | 01 | 01 | - |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 01 | - | 01 |
| பிரதான கணக்காளர் | 01 | 01 | - |
| பணிப்பாளர் | 01 | 01 | - |
| உதவிச் செயலாளர் | 01 | 01 | - |
| கணக்காளர் | 01 | 01 | - |
| கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு) | 01 | - | 01 |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) (ஆங்கிலம்/தமிழ்) | 02 | - | 02 |
| நிர்வாக உத்தியோகத்தர் (அ.மு.உ.சே.உயர் வகுப்பு) | 01 | - | 01 |
| அ. முகாமைத்துவ உதவியாளர் | 20 | 13 | 07 |
| பெறுகை உதவியாளர் | 01 | 01 | - |
| நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடல் உதவியாளர் | 06 | 06 | - |
| கணக்கு உதவியாளர் | 03 | 03 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 04 | 03 | 01 |
| தகவல் தொழினுட்ப உதவியாளர் | 02 | 02 | - |
| வரவேற்பு உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| அலுவலக சேவக சேவை | 09 | 09 | - |
| சாரதிச் சேவை | 10 | 07 | 03 |
| மொத்தம் | 68 | 52 | 16 |

**2014 ஆம் ஆண்டினுள் அமைச்சின் பணிக்குழுவின் மாற்றங்கள்**

ஆட்சேர்க்கப்பட்ட புதிய உத்தியோகத்தர்கள்

| பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| 01.செல்வி ஜே.டப்.எஸ். கே. ஜயரத்ன | அ.சே.சே III | 2014.08.01 |

இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்

| பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச சென்ற திகதி |
|---|---|---|
| 01.திரு. சம்பத் துமிந்த தொம்பகே | அ.சே.சே.III | 20140.01.03 |
| 02.திருமதி. ஆர்.பீ.யூ. ஸ்ரீமாலி | அ.மு.உ.III | 20140.01.24 |
| 03.திருமதி. எச்.ஏ.சீ. பெரேரா | அ.மு.உ. (உயர்தர வகுப்பு) | 2014.07.05 |
| 04.திருமதி. ரேணுகா கால்லகே | அ.மு.உ.III | 2014.08.01 |
| 05.திரு.வஜிர கும்புருகமுவ | இ.பொ.நி.சே.I | 2014.10.31 |

இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்

| பெயர் | பதவி | சமூகமளித்த திகதி |
|---|---|---|
| 01 திருமதி. ரேணுகா கால்லகே | அ.மு.உ.II | 2014.01.20 |
| 02 திருமதி. என்.டீ. எச்.சிங்கப்புகே | இ.பொ. நி.சே.III | 2014.04.03 |

சேவைக்கு சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| பெயர் | பதவி | சமூகமத்த திகதி |
|---|---|---|
| 01 செல்வி டப் ஏ.பீ. செவ்வந்தி | அ.மு.உ.III | 2014.01.06 |

## பணிக் குழுப் பயிற்சி 2014

நிறுவனமொன்றின் பணிக்குழுவிற்கு பயிற்சி அளிப்பது சேவையின் வினைத்திறனுக்கும் செயற்திறனுக்கும் பெரிதும் உதவக்கூடிய காரணமாகும். இவ் அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட அநேகமான உத்தியோகத்தர்கள் 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டு ரீதியாக பல்வேறு பயிற்சி பாடநெறி மற்றும் பயிற்சி பட்டறைகளுக்கு பங்குபற்றியுள்ளனர். 2014 ஆம் ஆண்டில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் எவருக்கும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கு பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காததோடு 2014 ஆம் ஆண்டினுள் அமைச்சின் பணிக்குழுவுக்காக வழங்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிப் பற்றிய தகவல்கள் கீழ் வருமாறு:

| பாடநெறியின் பெயர் | பங்குபற்றியோர் பெயர் | நடாத்தப்பட்ட இடம் | திகதி |
|---|---|---|---|
| கணக்கு எழுதுவினைஞர்களின் கடமையும் பொறுப்பும் | திருமதி. நிர்மலா விஜேசுந்தர<br>செல்வி. சாமிக்கா சேனானாயக்க | எஸ்.டீ.எப்.எல் | 2014.05.23 |
| சிறாப்பர்/ காசாளர் பதவியின் கடமையும் பொறுப்பும் | திரு. பீ. யூ. எஸ். இராஜபக்ஷ | திறன்கள் மேம்பாட்டு நிறுவனம் (எஸ்.டீ.எப்.எல்) | 2014.05.28 |
| தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பயிற்சி | செல்வி கே.ஹிமன்தி சுவர்ணஸ்ரீ | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 2014.06.09<br>2014.06.11 |
| களஞ்சிய முகாமைத்துவம் | திரு ஆர். எம். பீ. பீ கருணாரத்ன | திறன்கள் மேம்பாடு நிறுவனம்(எஸ்.டீ.எப். எல் ) | 2014.06.26<br>2014.06.27 |
| அரசாங்கத்தின் பெறுகை நடைமுறை | திருமதி வை.வீ.எஸ்.ஜீ.யட்டிவல | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 2014.07.10<br>2014.07.11 |
| கிளை பிரதானிகளுக்காக முகாமைத்துவ பயிற்சி | திருமதி டீ.எச்.எஸ் பிரியானி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 2014.08.07<br>2014.08.08 |
| வினைத்திறன் அபிவிருத்தி பயிற்சி | திரு எஸ்.எச்.யூ.என் தம்மிக்க<br>திரு ஆர்.எம்.பீ.பீ கருணாரத்ன<br>திருமதி மாரி ப்லீஸியா ரணவீர<br>திரு டப்லியு சந்திரதாச | உற்பத்தித்திறன் செயலகம் | 2014.08.11<br>2014.08.12<br>2014.08.19<br>2014.08.25 |
| வெளியிட தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | அமைச்சின் அனைத்து பணிக்குழுவினருக்கும் | ஹயிபேண்ட் பயிற்சி நிறுவனம் மத்துகமை | 2014.09.08<br>2014.09.09 |
| புதிய நிகழ்ச்சித்திட்டங்களையும் | திருமதி நயனா | இலங்கை | 2014.09.12 |

| | | | |
|---|---|---|---|
| செயல்முறைகளையும் அறிமுகப்படுத்துதல் | சிங்கப்புலிகே | அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | |
| தமிழ் மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | திருமதி ஆர்.எச்.கே.ரணமுக்க<br>திருமதி மாரி ப்லீஸியா ரணவீர<br>செல்வி எஸ்.டீ ஆர்.செனவிரத்ன | தேசிய மொழிகள் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | 2014.09.20<br>2014.10.01 |
| மனிதவள முகாமைத்துவம் | திருமதி ஆர்.எம்.எம்.பீ ரத்னாயக்க | இராஜய சேவை பயிற்சி நிறுவனம் 7கொழும்பு | 2014.09.24<br>2014.09.25<br>2014.09.26 |
| 104 நிதி ஒழுங்குவிதி விசாரனைகளை டா த்துதல் | திருமதி நயனா சிங்கப்புலி | திறமைகள் அபிவிருத்தி நிதி(எஸ்.டீ.எப்.எல்) | 2014.09.26 |
| தமிழ் மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | செல்வி எச்.பீ.நதீக்கா தமயந்தி<br>திருமதி ஆர்.கே சமிலா குமுடுனீ<br>திருமதி கே.சுரங்கிகா | தேசிய மொழிகள் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | 2014.10.18<br>2014.10.29 |
| அரசாங்க கொடுப்பனவு செயல் முறைப் பற்றி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | செல்வி கே.ஹிமன்தி சுவர்ணஸ்ரீ | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 2014.11.07 |
| 104 நிதி ஒழுங்குவிதிகள் நட்டங்களை அறிக்கையிடல் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | செல்வி கே.ஹிமன்தி சுவர்ணஸ்ரீ | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 2014.11.26<br>2014.11.27 |
| அரசாங்க உத்தியோகத்தர்கள் அறிந்திருக்க வேண்டிய சட்டம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | திருமதி. நிர்மலா விஜேசுந்தர | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 2014.12.02 |
| தொடர்பாடல் மற்றும் முன்வைத்தல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | திரு பீ.யூ.எஸ். இராஜபக்ஷ | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 2014.12.03 |
| New Strategic Thinking On Organizational Development | திரு ஆர்.ஏ.டீ.சீ குணசேகர | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 2014.12.10 |

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு

முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் வழிகாட்டுதல்களுக் கேற்ப 2014 ஆம் ஆண்டிற்கு கணக்காய்வு முகாமைத்துவ குழுவை கூட்டி உரிய துறைகளைப் பற்றி பரிசோதித்து பிரேரணைகள் மற்றும் அவதானிப்புக்களை முன்வைத்து அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கூட்டம் நடைபெற்ற திகதிகள்**

2014.01.23 ஆரம்ப அறிக்கையை முன்வைத்தலும் 2013 ஆம் நான்காவது காலாண்டு கூட்டம்

2014.04.25 2014 முதலாம் காலாண்டு கூட்டம்

2014.07.25 2014 இரண்டாம் காலாண்டு கூட்டம்

2014.10.28 2014 மூன்றாம் காலாண்டு கூட்டம்

**பங்குபற்றிய உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| தலைவர் | -திருமதி பிரின்சி ஜயத்துங்க- செயலாளர், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு. |
| விஷேட பங்குபற்றல் | -திரு ஏ.எம்.டீ. நயனகாந்த – பிரதி கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் |
| அழைப்பாளர் | -திருமதி சந்திரா மியனவல –மேலதிக செயலாளர், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு |
| அங்கத்தவர் | -திருமதி ஏ.ஜீ. அனுலா விஜேரத்ன பிரதான கணக்காளர் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு |
| அங்கத்தவர் | -திர ஏ.ஹப்புகல – பணிப்பாளர், முகாமைத்துவ கணக்காய்வாளர் திணைக்களம் |
| அங்கத்தவர் | -திருமதி ஆர்.எச்.ஸீ.பீ.கே ரணமுக – கணக்காளர், பாராளுமன்ற அலுவல்க அமைச்சு |
| கண்காணிப்பாளர் அத்தியட்சகர் | -திருமதி. ரம்யா பெரேரா – கணக்காய்வு கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் |

வருடாந்த கணக்காய்வு திட்டத்தினை நடைமுறைபடுத்தல் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு சுற்றுநிருபத்தின் படி காலாண்டு கூட்டங்கள் சரியான முறையில் நடாத்தப்பட்டுள்ளன வினைத்திறனை மற்றும் செயற்திறனை உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சின் அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அதுவிடயமாக போற்றத்தக்க நிலையில் இருப்பதாக கூட்ட அமர்வுகளின் போது கூறப்பட்டுள்ளது.

**கௌரவ அமைச்சரின் பணிக்குழு**

| | **சுமேதா ஜீ.ஜயசேன** | **கௌரவ அமைச்சர்** |
|---|---|---|
| 01. | திரு பீ.ஐ.ஐ.டி சில்வா | தனிபட்டச் செயலாளர் |
| 02. | திரு டப்.எம்.எஸ் விஜேகோன் | தொடர்பாடல் செயலாளர் |
| 03. | திரு டீ.எம்.ஏ.ஐ திஸாநாயக்க | ஒருங்கிணைப்புச் செயலாளர் |
| 04. | திரு ரத்னசிரி வாதசிங்க | ஒருங்கிணைப்புச் செயலாளர் |
| 05. | திருமதி ரேணுகா நவகமுவ | உதவிச் செயலாளர் தொழில் உறவு (இ.நி.சே.அல்லாத) |
| 06. | திரு டீ.கே.ஆர்.வீரசேகர | ஆலோசகர் |
| 07 | திரு. எச். டப்ளியூ. அஜித் பிரியன்த | பொது சன தொடர்பு உத்தியோகத்தர் |
| 08. | திரு இந்துனில் கலப்பத்தி | முகாமைத்துவ உதவியாளர் |
| 09 | திரு ஆர்.எம்.நிஸ்ஸங்க ரத்னாயக்க | முகாமைத்துவ உதவியாளர் |
| 10. | திரு டீ.எம் ஜயரத்ன | முகாமைத்துவ உதவியாளர் |
| 11. | திரு எம்.பீ.பீ. குணவர்தன | முகாமைத்துவ உதவியாளர் |
| 12. | திரு டப்.ஜீ. அமல் தர்ஷன | முகாமைத்துவ உதவியாளர் |
| 13. | திரு ஜீ.டப். தேவேந்திர | முகாமைத்துவ உதவியாளர் |
| 14. | திரு டீ.எம் உபேவர்தன | சாரதி |
| 15. | திரு டப் டி.ஏ. குணவர்தன | சாரதி |
| 16. | திரு என்.எம்.எஸ்.பி.பீ. விஜேரத்ன | சாரதி |
| 17. | திரு டப்.எம். ஜயவர்தன | சாரதி |
| 18. | திரு ஜே.எம் சந்தன குமார | சாரதி |
| 19. | செல்வி எம்.எம்.எஸ்.என்.நெரஞ்சனீ | அலுவலக உதவியாளர் |
| 20. | திரு பீ.சீ.சீ சில்வா | அலுவலக உதவியாளர் |
| 21. | திரு ஆர்.எம்.ரஞ்சித் விஜித பண்டார | வீடியோ படப்பிடிப்பாளர் |
| 22. | திரு திஸ்ஸ தர்மதாஸ | சாரதி ( இணைந்த சேவை) |
| 23. | திரு டீ.எம்.ஏ.பீ. ஆரியரத்ன | சாரதி (இணைந்த சேவை) |

## பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் பணிக்குழு

| தொடர் இலக்கம் | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திருமதி பிரின்சி ஜயதுங்க | செயலாளர் |
| 02 | திருமதி சந்திரா மியனவல | மேலதிக செயலாளர் |
| 03 | திரு ஆர்.ஏ.டீ.சீ குணசேகர | பணிப்பாளர் |
| 04 | திருமதி ஏ.ஜீ. அனுலா விஜேரத்ன | பிரதான கணக்காளர் |
| 05 | திருமதி ஆர்.எச்.ஸீ.பீ.கே ரணமுக | கணக்காளர் |
| 06 | திருமதி நயனா சிங்கப்புலி | பிரதி செயலாளர் |
| 07 | திருமதி வியோனி பர்னாந்து | ஒருங்கிணைப்பு செயலாளர் |
| 08 | திருமதி ஏ.டப்.ஸீ.திசானாயக்க | அ.மு. உ.சே I |
| 09 | திருமதி டீ.எச்.எஸ் பிரியானி | அ.மு. உ.சே I |
| 10 | திருமதி எல்.ஏ.ஏன்.ஜே விமலரத்ன | அ.மு. உ.சே I |
| 11 | திருமதி டீ.எம்.அயிராங்கனீ மேரிஸ் | அ.மு. உ.சே II |
| 12 | செல்வி பீ.என்.பீ.சீ பெரேரா | அ.மு. உ.சே II |
| 13 | திருமதி பீ.ஜீ.டப்.ஏ.ஏ.ஜே ஜயசிங்க | அ.மு. உ.சே II |
| 14 | திருமதி டீ.சுனேத்திரா வெத்தசிங்ஹ | அ.மு. உ.சே II |
| 15 | திருமதி ஆர்.கே. சமிலா குமுதுனீ | அ.மு. உ.சே II |
| 16 | திருமதி பீ.ஜீ.டீ. ரத்னபிரபா | அ.மு. உ.சே II |
| 17 | திருமதி டப்.எஸ்.எம்.ஜே பர்னாந்து | அ.மு. உ.சே III |
| 18 | திருமதி என்.டீ.விக்கிரமாரச்சி | அ.மு. உ.சே III |
| 19 | திரு. டப். சந்திரதாஸ | அ.மு. உ.சே III |
| 20 | செல்வி. டப்.ஏ.பீ செவ்வந்தி | அ.மு. உ.சே III |
| 21 | திரு. என்.பீ. கலுத்தொட | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் சேவை III |
| 22 | திருமதி முதிதா கொலொன்னெ | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் சேவை III |
| 23 | திரு. ஆர்.பி.யுஎஸ் இராஜபக்ஷ | நிகழ்ச்சி திட்ட உதவியாளர் |

| | | |
|---|---|---|
| 24 | திரு. எஸ்.எச்.யூ.என் தம்மிக்க | நிகழ்ச்சி திட்ட உதவியாளர் |
| 25 | திரு. யூ.எல்.சீ. இந்துனில் | பெறுகை உதவியாளர் |
| 26 | திரு. ஆர்.எம்.பீ.பீ கருணாரத்ன | நிகழ்ச்சி திட்ட உதவியாளர் |
| 27 | திருமதி ஆர்.எம்.எம்.பீ ரத்னாயக்க | நிகழ்ச்சி திட்ட உதவியாளர் |
| 28 | திருமதி. நிர்மலா விஜேசுந்தர | கணக்கு உதவியாளர் |
| 29 | திருமதி.எஸ்.டீ.கே.ஆர் ஆரியரத்ன | கணக்கு உதவியாளர் |
| 30 | திரு எச்.ஏ.எஸ்.பீ. பிரியங்கர | கணக்கு உதவியாளர் |
| 31 | திருமதி. வை.வீ. சமந்தி கங்கா யடிவல | நிகழ்ச்சி திட்ட உதவியாளர் |
| 32 | திரு சீ.டீ சேனானாயக்க | நிகழ்ச்சி திட்ட உதவியாளர் |
| 33 | திரு கே.எச். சுவர்ண ஸ்ரீ | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 34 | செல்வி கே.டீ.தில்ஹானி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 35 | செல்வி எச்.பீ. நதீக்கா தமய ந்தி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 36 | திரு எஸ்.டீ.ஆர் செனவிரத்ன | வரவேற்பு உத்தியோகத்தர் |
| 37 | திரு ஐ. ஜயவீர | அ. சே. சே (விசேட) |
| 38 | திரு பீ. முருகன்டி | அ. சே. சே (விசேட) |
| 39 | திரு எஸ்.டீ. ஆனந்த | அ. சே. சே I |
| 40 | திரு ஜீ.ஜீ. விஜேரத்ன பண்டா | அ. சே. சே I |
| 41 | திரு. ஜீ.யூ.விமலசிறி கருசிங்க | அ. சே. சே III |
| 42 | திரு ஆர்.எம்.பீ. டீ. ரத்னாயக்க | அ. சே. சே III |
| 43 | திருமதி. மாரி பிலீஷியா ரணவீர | அ. சே. சே III |
| 44 | திருமதி. கே. சுரங்கிக்கா | அ. சே. சே III |
| 45 | திரு ஜே.டப்.எஸ்.கே ஜயரத்ன | அ. சே. சே III |
| 46 | திரு கே.டப் பிரேமதிலக்க | சாரதி I |
| 47 | திரு விமலசிரி ஹேவாமான | சாரதி II (அ) |
| 48 | திரு கே.வி.எஸ் ஜயரத்ன | சாரதி II (ஆ) |
| 49 | திரு டீ. சம்பத்.சுரங்க தெடிகம | சாரதி II (ஆ) |
| 50 | திரு பீ.எம்.ஆரியதிலக்க | சாரதி II (ஆ) |
| 51 | திரு டீ.ஏ.கே.பீ. திலக்கரத்ன | சாரதி II (ஆ) |
| 52 | திரு ஜே.எம்.எஸ்.கே விஜேரத்ன | சாரதி II (ஆ) |